ஓ, என்னே! அது உண்மையான காரியத்தைப் போன்றே தோற்றமளித்தது, ஆனால் அது வார்த்தையின்படியாக இருக்கவில்லை



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: நீங்கள் மறுபடியும் பிறந்தாக வேண்டும்

# (YOU MUST BE BORN AGAIN)

ஞாயிறு காலை, டிசம்பர் 31, 1961
பிரான்ஹாம் கூடாரம், ஜெபர்ஸன்வில்,
இந்தியானா, அமெரிக்கா

157. கொஞ்ச காலத்திற்கு முன்பு, நான் வரலாறுகளை வாசித்துக் கொண்டிருந்தேன். நான் அதிக நேரம் எடுக்கிறேனா? நான் சபையினுடைய வரலாற்றை வாசித்துக் கொண்டிருந்தேன். அங்கே பின்னாலிருக்கும் சகோதரி

ஆர்னால்டு சபையின் வரலாற்றைக் குறித்த ஏதோவொன்றின் பேரில் அன்றொரு நாள் என்னிடம் “ஆமென்” (amened) என்று கூறினார்கள் என்று நம்புகிறேன், அவர்கள் அதை வாசித்து வந்தார்கள். பரிசுத்த மார்ட்டினுடைய நாட்களில், அங்கே ஒரு இரவில் மடாலயத்தில் (துறவி மடத்தில்), ஒரு பையன் இருந்ததைக் கண்டேன், அவன், “கர்த்தர் என்னை பழைய ஏற்பாட்டினுடைய ஒரு பழங்கால தீர்க்கதரிசியாக ஆக்கியிருக்கிறார். புரிகிறதா? நான் பழங்கால தீர்க்கதரிசி களில் ஒருவன்” என்றான். நல்லது, அங்கேயிருந்த இச்சிறிய பள்ளியின் பிஷப்புடைய பெயரை என்னால் கூற முடிய வில்லை, இங்கேயிருக்கிற இதைப் போன்று வெறுமனே ஒரு சிறு

கூட்டம். இச்சமயத்தில் அவருடைய பெயரை என்னால் கூற முடியவில்லை, ஆனால் அவர் மார்ட்டினின் கீழாக பயிற்றுவிக்கப்பட்டிருந்தார். அது சரியாகத் தொனிக்கவில்லை, எனவே மற்ற சகோதரர்கள் அவனைத் தனியே விட்டு விட்டனர். அவன் நேரடியாக தீர்க்கதரிசனம் உரைத்து, “இன்றிரவு தேவன் இறங்கி வந்து, உங்கள் மத்தியில் இருக்கும்படியாக, ஒரு வெண் அங்கியை எனக்குத் தரப் போகிறார், அப்பொழுது நான் பழைய ஏற்பாட்டுத் தீர்க்க தரிசிகளில் ஒருவனாய் இருப்பதை நீங்கள் அறிந்து கொள் வீர்கள்” என்றான். எனவே அன்று இரவில், 12 மணிக்கு, உண்மையில் அது சம்பவித்தது. சத்தங்கள் கேட்டன, ஜனங்கள்

சுற்றிலும் போய்க் கொண்டிருந்தார்கள், அந்தப் பையனுக்கு ஒரு அங்கி கிடைத்து விட்டது, அது எவ்வளவு வெண்மையாக இருக்க முடியுமோ அவ்வளவு வெண்மையாக இருந்ததாக அவர்கள் கூறினார்கள். அவன் வெளியே வந்து, "நான் உங்களிடம் சொல்லவில்லையா? இப்பொழுது நீங்கள் எல்லாரும் நான் சொல்வதைத் தான் கேட்க வேண்டும். நான் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசி" என்றான்.

158. ஆனால் அந்த வயதான பிஷப்போ அது அப்படியே சரியென்று அதற்காகப் போய்விடவில்லை. அது வார்த்தையாக இருக்கவில்லை. தீர்க்கதரிசிகள் உருவாக்கப் படுவதில்லை, அவர்கள் முன்குறிக்கப்பட்டவர்கள். ஒரு

தீர்க்கதரிசி துவக்கத்திலேயே அவ்விதமாக நடந்து கொள்ள வில்லை. அது அவ்வாறு இல்லை என்று அதன் கனி நிரூபித்தது. பாருங்கள்? அது ஒரு தீர்க்கதரிசி அல்லவென்று கனிகள் நிரூபித்தன, பாருங்கள். எனவே அவன், "நாம் மீதியுள்ள இரவை உபவாசித்து ஜெபிப்பதிலும், கீர்த்தனைப் பாடல்களைப் பாடுவதிலும் செலவழிப்போம்" என்றான். ஒரு நாள் அல்லது அவ்வண்ணமாக கழிந்தது. சற்று கழிந்து, அந்த வயதான பிஷப், ஜெபித்து, "கர்த்தாவே, அந்தப் பையன்!" என்றார். அந்த வஸ்திரம், அவர்கள் அதைப் பார்த்தனர்... அவர்களுக்கு எதுவுமே தெரியவில்லை, அதைப் போன்ற எதையும் கண்டதுமில்லை.

எழுத்தாளர்கள் வந்து, அதைப் பார்த்தனர், அதைப்போன்ற எதையும் அவர்கள் ஒருபோதும் கண்டதேயில்லை. அங்கே அது இருந்தது. கடைசியாக, தீர்க்கதரிசியாக இருந்த ஒரு மனிதனை அவர்கள் அறிந்திருந் தார்கள், அதுதான் மார்டின். அவர்கள், "சரி, இப்பொழுது எங்களுக்கு நிரூபித்துக் காட்ட நீ ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும். வேதப்பூர்வமாக நீ தவறாயிருக்கிறாய். நீ மார்டினிடம் போய், அவருக்கு முன்பாக நின்று, அதை அவரிடம் கூறுவதைக் குறித்து என்ன?" என்றார்கள். பாருங்கள்?

அவன், "ஓ, மார்டின் முன்பாக நிற்க நான் அனுமதிக்க மாட்டேன்" என்றான்.

159. நல்ல தங்கத்தை வைத்திருக்கிறவன் பரிசோதிக்கும் இயந்திரத்திற்குப் (testing machine) போக பயப்பட மாட்டான்; உ-ஊ, அது சரியே, சத்தியத்தைப் பெற்றிருக்கிறவன். ஆகையால் தான் நான் சவால் விடுகிறேன். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கொடுக்கப்படும் ஞானஸ்நானம் எங்கே தவறு என்று எந்த மனிதனும் வந்து எனக்குக் காண்பிக்கட்டும். மரிக்கும்படியாக நீங்கள் பெற்றிருக்கிற இந்தப் பிறப்பை எனக்குக் காண்பியுங்கள். நீங்கள் இன்னும் உலகத்தை உங்களுக்குள் வைத்திருந்தால், நீங்கள் இன்னும் உலகத்தினுடையவர்களாயிருக்கிறீர்கள். இந்தக் காரியங்களை எனக்குக்

காட்டுங்கள். அதைக் குறித்து கவலைப்பட வேண்டியதில்லை, அதை பரிசோதிக்கும் இயந்திரத்துக்கு எடுத்துச் செல்லுங்கள். *இதோ* இருக்கிறது பரிசோதிக்கும் இயந்திரம். பாருங்கள்? பாருங்கள்? அது சரியே.

160. எனவே அவர்கள், “நீ எப்படியும் போகிறாய்” என்றார்கள். ஒரு கூட்டம் சகோதரர்கள் அவனைத் தூக்கிச் சென்றனர், அப்போது அந்த அங்கி மறைந்து விட்டது. பாருங்கள்? இன்று பெந்தெகோஸ்தே ஜனங்கள் அதை எவ்வித கேள்வியுமின்றி நம்ப மாட்டார்களா? ஓ, என்னே! அது உண்மையான காரியத்தைப் போன்றே தோற்றமளித்தது, ஆனால் அது வார்த்தையின்படியாக இருக்கவில்லை.

